13.02.2026
O.S.No. 303/2021
PW1– ஷயின்ஜா விஜயராணி– க/பெ. செல்வபண்ணையார்
Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.02.2026

குறுக்கு விசாரணை தொடர்ச்சி : ( பிரதிவாதி தரப்பில்)

4. வழக்கு சொத்து எனக்கு கிரையங்கள் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் 17.08.2006 ல் நான் வழக்கு 2ம் அட்டவணை சொத்தை கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. அதைபோல் நான் 40 செண்ட் நிலத்தை 30.05.2005 ல் செந்தூர்பாண்டியன் கிரையம் பெற்ற ஆவணத்தின் அசல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்ப்படுகிறது.** அதே இடத்தை செந்தூர்பாண்டியனிடமிருந்து நான் கிரையம் பெற்ற ஆவணத்தின் அசல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் 13.12.2011 தேதியிட்ட பொதுஅதிகார ஆவணம் நான், 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தின் அசல் ஆவணம் என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடைய முகவர் நிலையில் தான் 2,3 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான்.

7. வழக்கு சொத்துக்களை 2,3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியிடம் இருந்து என்னுடைய பொதுஅதிகார முகவர் நிலையில் பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் தான் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் நம்பிக்கை கிரையம் என்றுதான் கூறினார்கள். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8. பி.வா.சா.ஆ.4 பொதுஅதிகார ஆவணத்தை 31.12.2012ல் பவர் ரத்து ஆவணம் என தலைப்பிட்டு வா.சா.ஆ.5 ஆவணத்தை ஏற்படுத்தினோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் பதிவு பெறாத ஆவணம் என்பதால்அது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ.5 ஆவணத்தில் "மனோகர் பவர் ஏஜெண்டாக நியமனம் செய்திருந்ததாகவும், அதில் சொத்துக்குரிய வரவு செலவுகளை என்னிடம் சரியானபடி காட்டிவராததால் நானே நிர்வகிக்க இருப்பதாலும் மேற்படி ஊத்துமலை சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட 116/11ன் பவர் பத்திரத்தை ரத்து செய்கிறேன்" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. 1ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்துவற்கு முன்பு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான், என்னால் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ய முடியாததால் தான் வா.சா.ஆ.5 ஆவணத்தை என் கைவசம் வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

11. நான் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக தான் 1ம் பிரதிவாதியை என் பொதுஅதிகார முகவராக நியமித்து பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரிதான். எனவே எனது பொது அதிகாரம் பெற்ற முகவராக இருந்து, எனக்காக வழக்கு சொத்துக்களை 2,3 பிரதிவாதிகளுக்கு பி.வா.சா.ஆ.5ன் மூலம் கொடுத்த கிரையம் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. எனக்கு சொத்து கிரையம் கொடுத்த விவரம் தெரியும் என்றாலும், சொத்து அதிக விலைக்கு போகும் என்பதால் பொய்யான காரணங்களோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

12. 1ம் பிரதிவாதியின் மீது எந்த புகாரும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல, சிதம்பரம் மற்றும் மனோகர் மீது மாவட்ட நிலஅபகரிப்பு பிரிவில் புகார்கொடுத்தேன். மேற்படி விசாரணையில் 1ம் பிரதிவாதி பணத்தை கொடுத்துவிடுவேன் என்று உறுதியளித்தால் வெளிநபர்கள் மூலம் பேசி தீர்த்துக்கொள்ளுங்கள் என விசாரணை முடித்துவைக்கப்பட்டது. பணம் தந்துவிடுவார் என்ற நம்பிக்கையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

13. மேற்படி நபர்கள் பணத்தை தந்துவிடுவதாக சொல்லியும் தராததால் ஊத்துமலை காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சுமார் 7,8 வருடங்களாக இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துவந்தேன், அவர்கள் பணம் தருவேன் என்று ஏமாற்றி வந்தார்கள்.

14. 2,3 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்தை வேறு நபர்களுக்கு விற்பனை செய்து சிதம்பரத்திடம் பணத்தை திரும்பதருவதாக கூறினார்கள். ஆனால் எனது பிராதில் சிதம்பரத்தை பற்றி எதுவும் கூறவில்லை என்றால் சரிதான்.

15. 2,3 பிரதிவாதிகளிடம் இருந்து 4,5 பிரதிவாதிகள் கிரையம் வாங்கியதால்தான் அவர்களை கட்சி சேர்த்துள்ளேன் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் தகுந்த பயனீட்டு தொகைக்கு விற்பனை செய்து, வழக்கு சொத்தை கையாடல் பண்ண வேண்டும் என்ற நோக்கோடுதான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

16. எனது பிராதில் பொதுஅதிகார ஆவணத்தை ரத்து செய்து தருமாறு 10.01.2013 ல் கேட்டதாக கூறியிருப்பது குறித்து தெரியாது என்றால் தேதி தெரியாது. ஆனால் கேட்டுக்கொண்டே இருந்தேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி